**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE SHOLINGANALLUR**

**OS. No.23/*2024***

Deposition of Witness for Plaintiff/Defendant Solemnly Affirmed by Tmt. S.Ramalakshmi, Assistant in accordance with the provisions of Act X of 1873 on 23.03.2026.

| | | | |
|---|---|---|---|
| Name | J.G.Srinivasan | Religion | |
| Father Name | J.N.Govinda Rao | Age | 53 |
| Village | | Calling | |
| Taluk | | | DW1 CROSS |

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. ஆறாவது தெருவில் வழியில்லை என்றும் அது தனியாருக்கு சொந்தமான நிலம் என்றும் அதில் சுவர் கட்டி உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி சொத்தின் கிழக்கு பக்கத்தில் நான் சுவர் எழுப்புவதற்கு முற்பட்டதாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் எந்த விதமான சுவரும் எழுப்பவில்லை. நான் வாங்கிய நாட்களில் இருந்து அதில் சுற்று சுவர் மற்றும் இரும்பு கேட் உள்ளது. வாதியின் கிழக்குப் பக்க நுழைவாயிலில் எதுவும் நான் வைக்கவில்லை என்றால் சரிதான். கிழக்கு பக்கம் உள்ள இடம்தான் 16 அடி தனியார் நிலத்திற்கு நுழைவாயில் என்றால் சரியல்ல. வழக்கு அட்டவணை சொத்தில் குறிப்பிட்டுள்ள நகர் என்னவென்றால் CLRI நகராகும்.

2. நான் எனது மனைவிக்காக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரிதான். நான் வசிக்கும் நகர் சரஸ்வதி நகர் ஆகும். சரஸ்வதி நகரில் வீடு இல்லை காலி நிலம் தான். என்னுடைய இடத்திற்கு செல்வதற்கு தனி வழி உள்ளது என்றால் எனக்குCLRI நகர் ஆறாவது குறுக்கு தெருவில் தான் வழி உள்ளது சரஸ்வதி நகரில் வழியில்லை. சரஸ்வதி நகரில் வழி இல்லாமல் CLRI நகரில் எப்படி வழி இருக்கும் என்றால் என்னுடைய

பிளாடிற்க்குCLRI நகர் வழியாக தான் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது. EXB3 என்னுடைய கிரைய பத்திரம் என்றால் சரிதான்.

3. அதில் மேற்கு பக்கம் எனது நிலத்தின் எல்லை என்று குறிப்பிட்டுள்ளது, ஆனால் 16 அடி வழி எனது நிலத்திற்கு செல்வதற்கு பாதை என்று குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடவில்லை. ஆனால் அது பொது வழி பாதை என்பதால் அதை பயன்படுத்த எனக்கு உரிமை உள்ளது. என்னுடைய கிரைய பத்திரத்தில் அதை எனது நிலத்திற்கு பாதையாக பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு என்னுடைய நிலத்திற்கு சரியான வழி பாதை இல்லாத காரணத்தினால் தான் இன்றைய தேதி வரை நான் எனது நிலத்தை எந்த அபிவிருத்தியும் செய்யாமல் வைத்து வருகிறேன் என்றால் சரியல்ல. 2012 இல் வாங்கிய பின்பு இன்றைய தேதி வரை நான் CLRI நகர் வழியாக செல்வதற்கு முயற்சி செய்து வருகிறேன். ஆனால் இன்றைய தேதி வரை அதை செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல.

4. நான் இன்றைய தேதி வரை அதைத்தான் பயன்படுத்தி வருகிறேன். நான் அந்த 16 அடி வழியை தான் பயன்படுத்தி வருவதாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் அந்த வழியை தான் பயன்படுத்தி வருகிறேன். அதற்கு நான் என்ன ஆவணத்தை கொடுக்க முடியும். அந்த 16 அடி வழியில்CLRI நகரின் 3 மனை தான் உள்ளது என்றால் சரிதான். அதில் என்னுடைய நிலமும் உள்ளது. EXB3 ஆவணத்தில் அட்டவணை சொத்தில் எங்கும்CLRI நகர் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சரஸ்வதி நகரை உருவாக்கிய போது என்னுடைய மனை2E க்கு எந்தவிதமான வழி பாதையும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

5. என்னுடைய மனை2E க்கு எந்தவிதமான வழியும் கொடுக்காமல் கிரைய பத்திரம் பதிவு செய்ததால் அந்த கிரைய பத்திரம் செல்ல தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய கிரைய பத்திரத்தில் வழியை பற்றி குறிப்பிடாததால் நான் எதிர் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய FMB ஸ்கெட்ச் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை தாக்கல் செய்து இருந்தால் என்னுடைய சரஸ்வதி நகருக்கு எது வழி என்று தெரிந்திருக்கும் என்றாலும் மாறாக எங்களுடைய CLRI நகர் வழியாக செல்வதற்கு முற்படுவதால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/-M.N.Rajanandhivarmasiva,
District Munsif cum Judicial
Magistrate Court,
Sholinganallur